**வட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி**

**முன்னிலை திருமதி.ஆ. சீதாலெட்சுமி, எம். ஏ., பி.எல்.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, மன்னார்குடி.

2024-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 21 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

திருவள்ளுவராண்டு 2055, குரோதி வருடம் ஆனித்திங்கள் 07 -ஆம் நாள்.

IA.No. 95/2024
in
OS.No. 19/2019

புஷ்பநாதன் ...மனுதாரர் /பிரதிவாதி

// எதிர்//

ஜெகநாதன் ...எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. S. உதயகுமார் அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. S.விஜயன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலணையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**<u>உத்தரவு</u>**

இம்மனு அசல் வழக்கில் மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள சாட்சிப் பட்டியலை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து இப்போது அங்கீகரித்துக்கொள்ள உத்தரவிடக்கோரி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 16 விதி 1 மற்றும் 2-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2. மனுவின் சுருக்கம் :-</u>**

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி ஆவார். அசல் வழக்கானது எதிர்மனுதாரர்/வாதியால் சுவாதீனம் பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு,

பிரதிவாதி டி.டபிள்யூ.1 ஆக விசாரிக்கப்பட்டு மனுதாரர்/பிரதிவாதி தரப்பு சாட்சி விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. தாவா சொத்தானது பிரதிவாதிக்கு சொந்தமானது என நிரூபிக்க பிரதிவாதிகள் தரப்பில் கூடுதல் சாட்சிகள் விசாரிக்க வேண்டியுள்ளது. அவர்களிடம் அனுமதிப்பெற்று சாட்சி பட்டியல் தாக்கல் செய்வதில் காலதாமதம் ஏற்பட்டுவிட்டது. ஆகவே, காலதாமதத்தை மன்னித்து தற்போது அங்கீகரித்துக்கொள்ள உத்தரவிடக்கோரி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

**<u>3. எதிர்மனுதாரர்/ வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:-</u>**

எதிர்மனுதாரரால் ஒப்புக்கொள்ளப்படுகின்ற சங்கதிகளை தவிர மற்றவற்றை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். அசல் வழக்கில் மனுதாரர்/பிரதிவாதி தரப்பு சாட்சியத்திற்காக பல வாய்தாக்கள் போடப்பட்டிருந்த போது சாட்சிப்பட்டியல் தாக்கல் செய்யாமல் அலட்சியபோக்குடன் இருந்துவிட்டு எதிர்மனுதாரருக்கு கஷ்ட நஷ்டத்தையும் வீண் மன உளைச்சலையும் கொடுக்கவேண்டும் என்ற கெட்ட நோக்கத்தில் காலம் தாழ்த்தி தற்போது இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார். சாட்சிகள் மனுதாரரின் நெருங்கிய உறவினர் என்பதால் மனுதாரருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கவைத்து எதிர்மனுதாரருக்கு எதிராக நீதிமன்றத்தை ஏமாற்றவேண்டும் என்ற எண்ணத்தில் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார். ஆகவே இம்மனுவினை தள்ளுபடி செய்யவேண்டும் என்று எதிருரை தாக்கல் தாக்கல் செய்துள்ளார்.

**4. இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? என்பதே தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை ஆகும்.**

**<u>தீர்வு:-</u>**

**1.** இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. மனு, நிரூபணவாக்குமூலம், எதிருரை, வழக்காவணங்கள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டது.

2. இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**3.** மனுவினை பரிசீலிக்கும்போது அசல் வழக்கில், பிரதிவாதிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு வழக்கறிஞரின் வாதத்திற்காக போடப்பட்டுள்ள நிலையில் தற்போது மீண்டும் சாட்சிகள் விசாரிக்கவேண்டும் என்று மனு தாக்கல் செய்துள்ளார்கள்.

இருதரப்பு வாதங்களும் கருத்திற்கொள்ளப்பட்டது. மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் பிரதிவாதி பி.சா1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். வாதுரைக்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலையில் பிரதிவாதி தரப்பு சாட்சிகளாக இம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்களை விசாரிக்க அனுமதி வழங்க கோரியுள்ளார். எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபணை தெரிவித்துள்ளபோதும், மனுதாரருக்கு அவரது தரப்பு கட்சிகளை நிரூபணம் செய்வதற்கு ஒரு வாய்ப்பு அளிக்கவேண்டும் என்பதாலும், இம்மனுவை நீதியின் நலன் கருதி விரைவாக மனுதாரர் தரப்பு சாட்சி விசாரணையை முடிக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் அனுமதிக்கலாம் என முடிவு செய்கிறது.

**முடிவில்,** இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவு எனனால் சொல்லப்பட்டு சுருக்கெழுத்தரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு திறந்த இந்நீதிமன்றத்தில் இன்று (21.06.2024) அவையறியப் பகரப்பட்டது.

(S/d. A.Seethalakshmi )

மாவட்ட உரிமையியல் நீதிபதி

மன்னார்குடி.

**<u>குறியிடப்பட்ட சான்றாவணங்கள் மற்றும் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்</u>**

**இருதரப்பிலும் :** இல்லை

(S/d. A.Seethalakshmi )
மாவட்ட உரிமையியல் நீதிபதி
மன்னார்குடி.

-